## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக
# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

நாள் 11.2.2025



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. தமிழ்நாட்டிற்கான கல்வி உதவித்தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும்.**

**கனிமொழி கருணாநிதி**



தி.மு.க. நாடாளு மன்றக் கட்சித் தலை வரும் தூத்துக்குடி மக் களவை உறுப்பின ருமான கனிமொழி எம்.பி. நேற்று (11.02.2025) மக்களவை நேரமில்லா நேரத்தில் தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ள சமக்ர சிக்ஷா அபியான் நிதியை உடனடியாக விடுவிக்கு மாறு ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்புவரை பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உதவித் தொகை களுக்கான வருமான உச்சவரம்பை EWS மாணவர்களை போலவே எட்டு லட்சமாக உயர்த்தவதன் மூலம் விளிம் புநிலை சமூக மக்கள் அதிக அளவில் கல்வி பயில இயலும் என்பதால் ஒன்றிய அரசு அதற்கான நடவடிக்கைகளை உட னடியாக எடுக்க வேண்டும் என்பதை விவாதிக்க அவையில் ஒத்திவைப்பு தீர் மானத்தை கனிமொழி எம்.பி அவர்கள் முன்மொழிந்தார்.

**2. மீனவர்களை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!**

**டி.ஆர்.பாலு கடுமையாக சாடல்!**

தொடர்ச்சியாக இலங்கை கடற்படை யினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரி திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் போராட் டம் நடத்தியும், அவையில் குரல் எழுப்பி யும் வலியுறுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. அவர்கள் ஒன்றிய அரசால் இனி மீனவர்களை காக்க இய லவில்லை என்றால், இருநாட்டு மீனவர் களும் அவர்கள் பிரச்சினைக்கு அவர் களே தீர்வு காணட்டும் என மக்களவையில் பேசியதன் விவரம் பின்வருமாறு:



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள மீனவர்க ளின் துயர நிலையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும் புகிறேன். உண் மையில், கடந்த 2024 ஆம் ஆண்டில், 528க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந் துள்ளன. இந்த ஆண்டு, 40 நாட்களுக் குள், 77க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. இலங்கை கடற்படை யின் மீனவர்களை துன்புறுத்தி, அவர் களின் உடைமைகளை எடுத்துக் கொண்டு, அவர்களைக் காவலில் வைத்தது.

இலங்கை கடற்படை எங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து மக்களைச் சுட் டுக் கொன்றது. 27 ஆம் தேதி, அவர்கள் இரண்டு மீனவர்களைச் சுட்டுக் கொன் றனர். பிப்ரவரி 8 ஆம் தேதி, அவர்கள் 14 க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழு தினார்.

இன்னும் 216 மீன்பிடி படகுகளும் 97 மீனவர்களும் இலங்கையின் காவ லில் உள்ளனர். இந்திய அரசு எதுவும் செய்யவில்லை. அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இலங் கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள இரு மீனவ சமூகங்களும், நவம்பர் 2016 இல் நடந்ததைப் போல, இந்த பிரச்சி னையை அவர்களே விவாதித்து முடிக்கு வரும் வகையில் ஏற்பாடு செய் யவேண்டும். ஒன்றிய அரசால் இப்பிரச் சினை தீர்க்க முடியாவிட்டால் இரு நாட்டு மீனவர்களும் தாங்களாகவே அதைத் தீர்த்துக் கொள்ளட்டும்.



**3.கோயம்புத்தூரில் எய்ம்ஸ்?!**

**பி.வில்சன்**

அன்றாட கூலியாக பணிபுரியும் பெண்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குமாறு தருமபுரி தொகுதி மக்களவை உறுப்பினர் அ. மணி நாடாளுமன்ற கேள்வி நேரத்தில் வலியுறுத்தியுள்ளார். அதில் அவர் அன் றாடம் கூலி பெறும் பெண்களுக்கு ஊதிய ஏற்றத்தாழ்வுகளை தடுக்கவும் பணியிடப் பாதுகாப்பை உறுதி செய்ய வும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**4. முத்ரா கடன் முழுமையாக பயன் தருவதை உறுதி செய்க**

**இரா.கிரிராஜன்**



முத்ரா கடன் திட் டத்தின் (PMMY) வரம்பை அரசாங்கம் 20 லட்சமாக உயர்த் திய பிறகு தமிழ்நாட் டில் சிறு மற்றும் குறு தொழில்களுக்கான மூலதன நிதி எளிதாக கிடைக்கப் பெறு வதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என திமுக மாநிலங்கலவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் வலியுறுத் தியுள்ளார்.

அதில் அவர் தமிழ்நாட்டில் முத்ரா கடந்திட்டத்தின்கீழ் பயனடைந்த நபர்க ளின் எண்ணிக்கை, 2022, 2023, 202324 மற்றும் 202425ஆம் ஆண்டுகளில் ஷிஷு, கிஷோர், தருண் மற்றும் தருண் பிளஸ் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட தொகைகளின் விவரங் கள், முத்ரா கடன் திட்டத்தின் கீழ் பெண் கள் மற்றும் சிறுபான்மையினர் தொழில்முனைவோரை திறம்பட சென் றடைவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கடன் பாது காப்பை மேம்படுத்த மைக்ரோ யூனிட் களுக்கான கடன் உத்தரவாத நிதி (CGFMU) எவ்வாறு பங்களித்துள்ளது போன்ற விவரங்களை வெளியிடுமாறு கேட்டுள்ளார்.

## தி.மு.க. மாணவர் அணி
# சென்னை தெற்கு மாவட்ட ஒன்றிய, பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!
## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **சென்னை தெற்கு மாவட்ட ஒன்றிய, பகுதி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள்** பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### சென்னை தெற்கு மாவட்டம்

#### வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் – பா.லோகேஷ்,** பிளாட் எண்- 133, கதவு எண்-28, அம்பத்தூர் கூட்டுறவு நகர், அயப்பாக்கம், சென்னை-600077.

துணை அமைப்பாளர்கள் - 1) சா. கார்த்திக், எண்- 2470, டிஎன்எச்பி, அயப்பாக்கம் சென்னை-600077. 2) கு.மாரியப்பன் எண்- 24,மகாலிங்கம் தெரு, பவானி நகர், அயப்பாக்கம், சென்னை- 600077. 3) ந.ஈஸ்வர், குளக்கரைத் தெரு அடையாளம்பட்டு, வானகரம் சென்னை - 600095. 4) எ.சிவப்ரகாஷ், எண்- 2/2, கங்கை அம்மன் கோவில் தெரு ஓடமாநகர் வானகரம் சென்னை - 600095. 5) கு.உனிதா குமாரி, எண்- 6739, டிஎன்எச்பி அயப்பாக்கம், சென்னை-600077.

#### தாமஸ்மலை தெற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் – சு.கிஷோர்,** எண். 12/52, இந்திரா காந்தி தெரு மேடவாக்கம் சென்னை - 600100.

துணை அமைப்பாளர்கள் - 1) வெ.பாலாஜி எண்-1/173,அபிநந்தன் நகர் நன்மங்கலம் சென்னை- 600129. 2) கு.விஷ்ணு, எண்-4. ரூபி என்க்ளவ் 7 வது தெரு, சின்ன கோவிலம்பாக்கம், சென்னை 600129. 3) சு.சாம் செல்வின் ராஜா, எண்-6/85, செல்லப்பா தெரு சந்தோஷபுரம், சென்னை 600073. 4) ல.சிவகுமார், கரணை மெயின் ரோடு அரசன் கழனி, ஒட்டியம்பாக்கம் சென்னை - 600136. 5) மா.பிரியதர்ஷினி, கதவு எண்- 55 பிளாக் எண்-96 தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் எழில் நகர், பெரும்பாக்கம் சென்னை 600100

#### சைதை மேற்கு பகுதி

**அமைப்பாளர் – க.விக்னேஷ்,** எண்.18. ராகவன் தெரு. முத்துரங்கம் பிளாக், ஜாபர்கான்பேட்டை, சென்னை-600083.

துணை அமைப்பாளர்கள் - 1) மூ.கௌதம், எண் 37/85, மேற்கு ஜோன்ஸ் ரோடு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை-600015. 2) த.சுகேஷ்குமார், எண் 4704, வண்டிக்காரன் தெரு, மேற்கு மாம்பலம் சென்னை-600033. 3) ஆர்.அருண்குமார், எண் 4731.விசாகத் தோட்டம் தெரு, மேற்கு சைதாப்பேட்டை சென்னை-600015. 4) எம்.கேசவன், எண்.45.கொத்தவால் சாவடி தெரு. ஹவுசிங் போர்டு, மேற்கு சைதாப்பேட்டை சென்னை 600015. 5) தீபா பிரகாஷ், எண் 73 பெருமாள் கோயில் தெரு. சைதாப்பேட்டை சென்னை-600015

#### சைதை கிழக்கு பகுதி

**அமைப்பாளர் – சு. தனுஷ்,** எண். 125, தொழிலாளர் குடியிருப்பு கிண்டி, சென்னை - 600 032.

துணை அமைப்பாளர்கள் - 1) செ. சந்தோஷ்குமார், எண். 25, செட்டி தோட்டம், சைதாப்பேடை சென்னை-15. 2) ச. நவநீதகிருஷ்ணன், எண். 1/6, புதுத்தெரு, கோட்டூர், சென்னை-85. 3) ம.அருண்குமார், எண்-5 'யு' பிளாக் பாரதிதாசன் தெரு பி காவேரி நகர், சைதாப்பேட்டை சென்னை 600015 4) ல.தனுஷ் எண். 15, முதல் தெரு, கன்னிகாபுரம் கிண்டி, சென்னை-32. 5)சர்மிளா, எண்.50/24, நெடுஞ்செழியன் தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை - 42.

#### மதுரவாயல் வடக்கு பகுதி

**அமைப்பாளர் – மனோஜ் குமார்,** எண்- 1/56, கங்காநகர் மதுரவாயல், மேட்டுக்குப்பம் சென்னை-600095.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.விஜய், எண்- 5/411, முகப்பேர் மேற்கு, சென்னை 600037. 2) ஆர். கோபிநாத் எண்- 49, ஏரிக்கரை தெரு நெற்குன்றம், சென்னை. 3) வெ.கௌசிகன், எண்- 1/26, முகப்பேர் மேற்கு, சென்னை 600037. 4) எஸ்.ஜெயசூரியா, எண்- 257, பெருமாள் கோவில் தெரு, சென்னை - 37. 5) காயத்ரி, எண்.83/77 வேணுகோபால் தெரு முகப்பேர் சென்னை 600037

#### மதுரவாயல் தெற்கு பகுதி

**அமைப்பாளர்– பா.பழனிச்சாமி,** எண்.33எ, ஜானகிராமன் காலனி திருவள்ளுவர் தெரு நெற்குன்றம், சென்னை 600107. துணை அமைப்பாளர்கள் - 1) த.ஹரிஹாரன் எண்- 1/3 பி,வெங்கடேஸ்வரா நகர் குறுக்கு தெரு ராமாபுரம், சென்னை 600089, 2) பெ. ஹரி கிருஷ்ணா அம்மன் கோவில் தெரு காந்தி நகர், காரம்பாக்கம் போரூர், சென்னை 600116. 3) மு.கார்த்திக்ராஜா காந்தி தெரு, மீனாட்சி அம்மன் தெரு சென்னை 600087. 4) மு. விக்னேஸ்வரன் சக்தி நகர் முதல் தெரு கங்கை அம்மன் அவென்யூ காமராஜர் சாலை ராமாபுரம், சென்னை 600087. 5) தா.தீபிகா எண்.19, காளியன்மன் கோவில் 2வது தெரு, போரூர்

#### சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி

**அமைப்பாளர் – தி.சண்முகராஜன்** எண்.3/533, வி.பி.ஜி, அவென்யூ, விநாயகர் கோவில் தெரு மேட்டுக்குப்பம், சென்னை - 600097 .

துணை அமைப்பாளர்கள் - 1) அ.ராஜேஷ் எண்.4/973, 4வது தெரு, ராஜேந்திர நகர், நீலாங்கரை சென்னை - 600115. 2) அசோக் துரை பள்ளத்தெரு, சின்னாண்டிக்குப்பம், ஈஞ்சம்பாக்கம் சென்னை - 600115. 3) த.க.கலாநிதி எண்.32வது, குறுக்கு தெரு கண்ணகி நகர், ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை - 600097. 4) கு.சரண் எண்.2/97, கருமாரி அம்மன் கோவில் 2வது தெரு நியூ காலனி, கொட்டிவாக்கம் சென்னை 41. 5) எஸ். அனீஷ் பாத்திமா எண்-முதல் குறுக்கு தெரு பெத்தால் நகர், ஈஞ்சம்பாக்கம் சென்னை - 600115

#### சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி

**அமைப்பாளர் – ஜி.எல். ரமணா** எண்- 16, ஊமைத்துரை தெரு, பெருங்குடி, சென்னை- 600096.

துணை அமைப்பாளர்கள் - 1) மு.சுஜாதா, எண்-2163, பகுதி மயிலை பாலாஜி நகர், பள்ளிக்கரணை சென்னை - 600100. 2) க. பரணி கரிகாலன் தெரு, திருவள்ளுவர் நகர், பெருங்குடி, சென்னை- 600096. 3) எஸ்.டில்லிபாபு செங்கழனி அம்மன் கோவில் தெரு புழுதிவாக்கம், சென்னை- 600091. 4) ரா.வாசு எண்- 16எ, 4 வது குறுக்கு தெரு ராஜிவ் நகர் பெருங்குடி சென்னை- 600096. 5) ஜெ.சார்லஸ், வ உ சி தெரு, உள்ளகரம் சென்னை - 600061

#### சோழிங்கநல்லூர் மத்திய பகுதி

**அமைப்பாளர் – ம.சுமிர்** எண்- 16, பெருமாள் கோவில் தெரு பள்ளிக்கரணை சென்னை - 600100.

துணை அமைப்பாளர்கள் - 1) த.சதிஷ், எண்- 5,சோழன் தெரு , அண்ணா எம் ஜிஆர் நகர், பள்ளிக்கரணை சென்னை-600100. 2) ஏ.சுரேஷ் எண்- 55, சாய் கணேஷ் நகர், 10 வதுகுறுக்கு தெரு, ஜலடியன்பேட்டை சென்னை- 600100. 3) ச.அன்பழகன் எண்-2/37, துலுக்கானத்தம்மன் கோவில் தெரு செம்மஞ்சேரி சென்னை- 600119. 4) ம.விவேகானந்தன் எண்- 37, பொன்னியம்மன் கோவில் முதல் தெரு சோழிங்க நல்லூர் சென்னை- 600119. 5) ஜெ.நிவேதா எண்- 2/146, கலைமகள், 2வது தெரு காரப்பாக்கம், சென்னை - 600097.

#### வேளச்சேரி மேற்கு பகுதி

**அமைப்பாளர் – டி எஸ் சூரிய பிரகாஷ்** எண்- 11ஏ, எம். ஜி.ஆர் நகர் 9 வது வேளச்சேரி, சென்னை 600042.

துணை அமைப்பாளர்கள் - 1) ச.பிரசன்னா குமார் எண்-1425- பி, டி.என்.எச்.பி காலனி வேளச்சேரி, சென்னை - 600042. 2) எஸ். தினேஷ் பிரபு எண்- 1923,டாக்டர் அம்பேத்கார் நகர் மேற்கு வேளச்சேரி, சென்னை - 600042. 3) எம்.தீபக் எண்- 21/22,பிள்ளையார் கோவில் தெரு வேளச்சேரி சென்னை- 600042. 4) ரா.ரிச்சர்ட் எண்-18, காமராஜர் தெரு, எம் ஜி நகர், தரமணி, சென்னை - 600113. 5) ச.கீர்த்தனா, எம் ஜி ஆர் நகர் வேளச்சேரி சென்னை-600042.

#### வேளச்சேரி கிழக்கு பகுதி

**அமைப்பாளர் – ம.கலைவாணன்** கெனால் பேங்க் ரோடு கஸ்தூரி பாய் நகர், அடையாறு சென்னை - 600020.

துணை அமைப்பாளர்கள் - 1) அ.ராஜா எண்-215, கக்கன் காலனி பெசன்ட் நகர் சென்னை- 600090. 2) ப.சக்திவேல் எண்- 28/10, திருவீதியம்மன் கோவில் தெரு திருவான்மியூர் சென்னை - 600041. 3) ஆ பிராங்கிளின் மனோவா எண்-5/11, ஈ.வெ.ரா. பெரியார் சாலை லட்சுமிபுரம், திருவான்மியூர் சென்னை- 600041. 4) எஸ் யுவராஜ் எண்- 811, 47வது, குறுக்கு தெரு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-600041. 5) உ.சரண்யா எண்- 43/8, 14 வது சந்து, இந்திரா நகர், அடையாறு, சென்னை- 600020.

**குறிப்பு : கலைஞர் நகர் (விருகம்பாக்கம்) வடக்கு, கலைஞர் நகர் (விருகம்பாக்கம்) தெற்கு பின்னர் அறிவிக்கப்படும்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்: 11-02-2025.

**சி.வி.எம்.பி. எழிலரசன்,** எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## மார்ச் 1 கழகத் தலைவரின் பிறந்தநாளை
# சென்னை தெற்கில் "சாதனைகளின் திருவிழாவாக" கொண்டாட முடிவு!
## சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டத்தில்
## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, பிப்.12

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக்கூட்டம் நேற்று (11.2.2025 செவ்வாய்க்கிழமை) காலை 11 மணியளவில் பள்ளிக்க ரணை ரேடியல் சாலையில் உள்ள பி.ஆர்.மஹாலில் மாவட்ட பொரு ளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழ கச் செயலாளர் - அமைச்சர் மா.சுப் பிரமணியன் கலந்துகொண்டு ஆலோசனை உரையாற்றினார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பி னர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம் பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.அருணாச்ச லம், பாலவாக்கம் க.சோமு மற்றும் தொகுதிப் பொறுப்பாளர்கள் பருதி இளம்சுருதி, சாய்ஸ்ரீராம் பாரதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் மு.மனோகரன், வாசு கிபாண்டியன், பகுதி கழகச் செயலா ளர்கள் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந் திரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், கே.கண்ணன், மு.ராஜா, துரை.கபிலன், சு.சேகர், நொளம்பூர் வே.ராஜன், வி.இ.மதியழகன், ஒன் றியக் கழக செயலாளர் கோவிலம் பாக்கம் வெங்கடேசன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மேடவாக்கம் ரவி, ஆர். பாலசுந்தரம், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், அடையார் பி.ஜே.பாஸ்கர், தங்க ராஜ், தா.பஷீர் மற்றும் ரத்னாலோ கேஷ்வரன், பத்மபிரியா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பா ளர்கள் எம்.விநாயகமூர்த்தி, ஆர். கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டி யன், கோட்டூர் பிரகாஷ், சங்கர்க ணேஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், சைதை சாதிக், கனிமொழி தனசேக ரன், சி.பரிமேலழகர், எம்.பார்த்தி பன், நிஷா, சி.சுரேஷ், ஜெகதீஸன், மணிகண்டன் நாடிமுத்து, டாக்டர் அனீஷ், ஹரிபாபு, உள்ளிட்ட வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் அணிகளின் பகுதி அமைப்பா ளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

முன்னதாக இந்த மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நடை பெறுவதற்கான நோக்கம் குறித்து மாவட்ட கழக செயலாளர் அமைச் சர் மா.சுப்பிரமணியன் உரை யாற்றினார்.



அவர் தம் உரையில் குறிப்பிட்ட தாவது:

**இளம் பேச்சாளர்களை இனம் கண்ட இளைஞர் அணிச் செயலாளர்**

கழகத் தலைவர் அவர்கள் இளை ஞர் அணி செயலாளரிடம் ஒரு 100 பேச்சாளர்களை அடையாளம் கண்டு அவர்களை இயக்கத்திற்கு ஒப்படைக்க வேண்டுமென்று தெரி வித்திருந்தார். ஆனால் நம் இளைஞ ரணிச் செயலாளர் அவர்கள் மாவட்ட அளவிலும், மாநில அளவி லும் பேச்சுப்போட்டிகளை நடத்தி அதில் 182 இளம் பேச்சாளர்களை இனம்கண்டு கழகத்திற்கு ஒப்ப டைத்தார். சென்னை தெற்கில் இளைஞர் அணி செயலாளரின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு முழுவதும் 182 பொதுக்கூட் டங்களை நடத்தி, ஒவ்வொரு நிகழ்ச் சிகளிலும் ஆயிரம், இரண்டாயிரம் பேர் பங்கேற்றிடும் வகையில் அந்நி கழ்ச்சிகளின் வாயிலாக நலத்திட்ட உதவிகளை வழங்கி ஏறத்தாழ ஒன் றரை லட்சம் பேர் பயனடைந்திட்ட நிகழ்ச்சிகளை நடத்தியதும் சென்னை தெற்கு மாவட்டக் கழகத் தினர்தான் என்பதும், அதில் நான் மாவட்டத்தில் பணியாற்றுவதை எனது வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன்.

அதேபோல் இன்னொரு சிறப் பான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கி றது. தலைமைக் கழகத்தின் சார்பில் இளைஞர்அணி, மாணவர் அணி, மகளிர் அணி என்று 23 அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அனைத்து அணிகளுக்கும் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்களை முதலில் நிய மித்த மாவட்டம் சென்னை தெற்கு மாவட்டம்தான். அதேபோல் சென்னை தெற்கில்தான் 22 அணிக ளுக்கும் பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதி வாரியாகவும், ஒன்றிய வாரி யாகவும்நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர் அணிக்கும் மட்டும் பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் பட்டியல் முர சொலியில் வர இருக்கிறது.

இது சாதாரணப் பணியல்ல. பகுதி கழக செயலாளர்களும், ஒன்றி யக் கழக செயலாளர்களும் தங்கள் பகுதியில் உள்ள நிர்வாகிகளை ஒருங்கிணைத்து ஒரு அமைப்பாளர், 5 துணை அமைப்பாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய பின்புலத்தை ஆராய்ந்து அவர்கள் இயக்கத்திற்கு பயன்படுவார்களா? என்பதை ஆய்வு செய்து அனைத்து பொறுப்பாளர்களும் தேர்ந்தெடுத் துக்கொடுத்ததால்தான் 23 அணிக ளுக்கும் நிர்வாகிகளை நியமிக்க முடிந்தது.

**துணை முதல்வரே வருகை தந்து நிர்வாகிகளை வாழ்த்துகிறார்!**

இந்நிகழ்வை பெரியளவில் கொண்டாட வேண்டும். எனவே தான் வருகிற 15ஆம் தேதி பகுதி அமைப்பாளர்கள், ஒன்றிய அமைப் பாளர்கள், பகுதி துணை அமைப்பா ளர்கள், ஒன்றிய துணை அமைப்பா ளர்கள் மொத்தம் 2693 பேர். இந்த இரண்டாயிரத்து அறு நூற்று தொண் ணூற்று மூன்று பேரும் பங்கேற்கிற நிகழ்ச்சி ஒன்று நடைபெற உள்ளது. அந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பங் கேற்றுச் சிறப்பிக்க உள்ளார். தலை மைக் கழகத்தின் சார்பில் கழக நிர்வா கங்களுக்காக நியமிக்கப்படுபவர்கள் தலைவரைச் சந்தித்து வாழ்த்துப்பெ றுவது என்பது வாடிக்கை. எனவே புதியதாக பொறுப்புக்கு வந்த 2693பேரையும் அழைத்துச் சென்று வாழ்த்துப்பெறுவது என்பது கடின மான காரியம். நீண்ட நாட்களாகும். எனவே அவரே வருகிற 15ஆம் தேதி திருவான்மியூரில் உள்ள ராமகிருஷ்ணா கன்வென்ஷனுக்கு வருகை தந்து உங் களை எல்லாம் வாழ்த்த உள்ளார்.

2019ஆம் ஆண்டு கழகத் தலைவர் பொறுப்பேற்றதிலிருந்து நடைபெ றுகின்ற அனைத்துத் தேர்தல்களி லும் வெற்றிபெறக்கூடிய மகத்தான தலைவராக நம் கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர் கள் விளங்குகிறார்.

அனைத்துத் துறைகளையும் சாதனை மிகுந்த துறைகளாக மாற் றிக்கொண்டு வருகிறார். எந்த ஆட் சியிலும் இதுவரை 10 லட்சம் பட் டாக்களை பொதுமக்களுக்கு எந்த அரசும் கொடுத்தது கிடையாது. ஆனால் கழகத் தலைவர் தலைமை யில் ஆட்சி அமைந்த பிறகுதான் வர லாற்றில் முதன்முறையாக 10 லட் சம் பட்டாக்களை வழங்கி மகத்தான சாதனை புரிந்துள்ளார்.

ஈரோடு தேர்தலில் கடந்த இரண் டாண்டுகளுக்கு முன்பு சற்றொப்ப 66ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.கழகம் வெற்றிபெற்றது. இரண் டாண்டுகளுக்குப் பிறகு தற்போது நடைபெற்ற இடைத்தேர்தலில் 96 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருக்கிறது. நம் எதிரி கள் என்னசொன்னார்கள் என்றால், தி.மு.கழகத்திற்கு மக்களிடையே செல்வாக்கு குறைந்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அது வல்ல கள நிலவரம் - இரண்டாண்டு களுக்குப் பிறகு 25 ஆயிரம் வாக்கு கள் அதிகமாகப் பெற்று ஈரோடு இடைத்தேர்தலில் வெற்றிபெற்றி ருக்கிறது தி.மு.கழகம். ஆனாலும் இப்படிச் சொல்வார்கள்.

எந்த பிரதான எதிர்க்கட்சிகளும் போட்டியிடாத காரணத்தால் வெற் றிபெற்றிருக்கிறது என்று. ஆனால் நீங்கள் தைரியமாகக் குறிப்பிடலாம். இரண்டாண்டுகளுக்குப் பிறகும் மிகுந்த செல்வாக்கோடு திராவிட முன்னேற்றக் கழக அரசு, கழகத் தலைவர் அவர்கள் பல்வேறு சிறப் பான திட்டங்களை நிறைவேற்றி மக் களை மகிழ்வித்துக்கொண்டிருக்கிறார் என்பதால்தான், இந்த அதிகமான வாக்குகள் நமக்குக்கிடைத்திருக்கிறது என்று இணையதளங்களிலும் புள்ளி விவரத்தோடு நீங்கள் வாதிடலாம்.

**பொதுமக்கள் நலன் பயக்கும் சாதனைகளின் திருவிழா!**

இப்படி தமிழ்நாட்டின் சிறப் பான சீர்மிகுந்த ஆட்சியை தமிழ் நாட்டில் நடத்திக்கொண்டிருக்கும் கழகத் தலைவரின் பிறந்தநாளை இந்தாண்டு மிகுந்த சிறப்பு வாய்ந்த பெரும் விழாவாக, சாதனைகளின் திருவிழாவாக பொதுமக்களின் நலம்பயக்கும்படி கொண்டாடப் பட வேண்டும்.

இந்தாண்டு மட்டும்தான் நாம் கொண்டாட முடியும். அடுத் தாண்டு மார்ச் மாதம் முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகளை அமல்ப டுத்திவிடுவார்கள்.

ஆகவே இந்தாண்டு மார்ச்1 கழ கத் தலைவரின் பிறந்தநாள் விழாவை சென்னைத்தெற்கில் சாதனைகளின் திருவிழாவாகக் கொண்டாடு வோம்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்ட வுடன், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் கரவொலி எழுப்பி தங் கள் மகிழ்ச்சியையும், ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

பிப்ரவரி 27 முதல் மார்ச் 31ஆம் தேதி வரை நடைபெறக்கூடிய நிகழ் வுகளை தேதி வாரியாக வரிசைப்ப டுத்தி இந்நிகழ்ச்சிகளை நடத்துபவர் களின் பட்டியலை மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அனைவரிடம் தெரிவித்தார்.

இறுதியாக மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் அசைவ மற்றும் சைவ உணவுகளை பகுதிக் கழகச் செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச் சந்திரன் ஏற்பாடு செய்திருந்தார்.




ஈரோடு தெற்கு மாவட்டம், பெருந்துறை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் விஜயமங்கலம் மேக்கூரில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக கண்டன பொதுக்கூட்டம் பெருந்துறை தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.சாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் போடி காமராஜ், குடியாத்தம் அன்பு, கழக தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் – பெருந்துறை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.